திரு நரசிங்கத் திருமாலே

tirunarasingat tirumAlE
(in praise of nava nRsimha at ahobhila divyadESam)

1 ஸ்ரீ லக்ஷ்மி நரசிம்மர்

**ஒரு பிள்ளை வாய்மொழி காத்து * ஒருதூணை அங்கே பிளந்து *
இரு உருவம் தானே ஆகி * இணை யில்லா எழில் ஒளியாய் *
அரு உரு எல்லாம் அடைந்திடவே * திரு உரையால் தணிந்தவனே *
திரு நரசிங்கத் திருமாலே * நின் திருவடி அடைந்தேன் அடியேனே!**

SrI lakshmI narasimmar

oru piLLai vAimozhi kAttu * orutUNai AngE piLandu *
iru uruvam tAnE Agi * iNa illA ezhil oLiyAi *
aru uru ellAm aDaindiDavE * tiru uraiyAl taNindavanE *
tiru narasingat tirumAlE * nin tiruvaDi aDaindEn aDiyEnE !

2 ஸ்ரீ ஜ்வாலா நரசிம்மர்

**நெருப்பாய் ஒளிரும் நிறைமூர்த்தி * நீராய் கரையும் நெடுமாலே*
இருப்பாய் இனிதாய் இலக்காக * இக்குகையே உனக்கு இடமாக *
விருப்புடன் அளிப்பாய் விலக்கின்றி * விரைவாய் பத்துடன் தனக்கின்றி *
திரு நரசிங்கத் திருமாலே * நின் திருவடி அடைந்தேன் அடியேனே!**

jvAlA narasimmar

neruppAi oLirum niRaimUrtti * nIrAi karaiyum neDumAlE *
iruppAi inidAi ilakkAga * ikkugaiyE unakku iDamAga *
viruppuDan aLippAi vilakkinRi * viraivAi pattuDan tanakkinRi *
tiru narasingat tirumAlE * nin tiruvaDi aDaindEn aDiyEnE !

3 ஸ்ரீ அஹோபில நரசிம்மர்

அருகில் பாலன் அங்கே நிற்க * அசுரன் அவனும் மடியில் கிடக்க *
பெருகும் இன்ப பெருநிதியை * பொங்கும் கனலுடன் அளித்தவனே *
அருமறை சாரம் அமலன் நீயே * பெரிய பெரிய எம் பெருமானே *
திரு நரசிங்கத் திருமாலே * நின் திருவடி அடைந்தேன் அடியேனே!

Srl ahobhila narasimmar

arugil bAlan angE niRka * asuran avanum maDiyil kiDakka *
perugum inba perunidhiyai * pongum kanaluDan aLittavanE *
arumaRai sAram amalan nIyE * periya periya em perumAnE *
tiru narasingat tirumAlE * nin tiruvaDi aDaindEn aDiyEnE !

4 ஸ்ரீ மாலோல நரசிம்மர்

வருகவருக எனும் சிரிப்புடனே * திருவை அணைத்த களிப்புடனே *
உருகஉருக தொழும் உகப்பாலே * குறுகுகுறுக ஆறும் உன் தகவாலே *
தருகதருக என்றவள் பரிவாலே * பெறுகபெறுக பேறு அளிப்பாயே *
திரு நரசிங்கத் திருமாலே * நின் திருவடி அடைந்தேன் அடியேனே!

Srl mAlOla narasimmar

varugavaruga enum sirippuDanE * tiruvai aNaitta kaLippuDanE *
uruga uruga tozhum ugappAlE * kuRugakuRuga ARum un tagavAlE *
tarugataruga enRavaL parivAlE * peRugapeRuga pERu aLippAyE *
tiru narasingat tirumAlE * nin tiruvaDi aDaindEn aDiyEnE !

5 ஸ்ரீ க்ரோட (வராஹ) நரசிம்மர்

இருவர் ஒன்றாய் இங்கிருந்து * இரணியன் இருவர் உடல் பிளந்து *
பொருத்தம் மிகுந்த பல்லுயர்ந்து * கருத்துடன் பெண்ணை கீழ் இடர்ந்து *
வருத்தம் தீர்க்க அவள் வேண்டி * வான்வழி வழங்கிய வேதியனே *
திரு நரசிங்கத் திருமாலே * நின் திருவடி அடைந்தேன் அடியேனே!

SrI krODa (varAha) narasimmar

iruvar onRAi ingirundu * iraNiyan iruvar uDal piLandu *
poruttam migunda palluyarndu * karuttuDan peNNai klzh iDarndu *
varuttam tIrkka avaL vENDi * vAnvazhi vazhangiya vEdiyanE *
tiru narasingat tirumAlE * nin tiruvaDi aDaindEn aDiyEnE !

6 ஸ்ரீ காரஞ்ச நரசிம்மர்

வருவாய் அங்கே ஆளரியாய் * வானர வீரன் சொல் இணங்க *
தருவாய் காட்சி தனுசுடனே * தரமுடன் அனந்தன் தலை வணங்க *
குருவாய் அமர்ந்தாய் யோகத்திலே * கருவாய் நின்றோம் ஞானத்திலே *
திரு நரசிங்கத் திருமாலே * நின் திருவடி அடைந்தேன் அடியேனே!

SrI kAranca narasimmar

varuvAi angE AlariyAi * vAnara vIran sol iNanga *
taruvAi kAtci tanusuDanE * taramuDan anantan talai vaNanga *
guruvAi amarndAi yOgattilE * karuvAi ninROm j~nAnattilE *
tiru narasingat tirumAlE * nin tiruvaDi aDaindEn aDiyEnE !

7 ஸ்ரீ பார்கவ (பரசுராம) நரசிம்மர்

பெருஞ்சின ராமன் தவமிருக்க * பல்லருள் செய்த பெரு மாயா *
கருங்குடலை குடைந்து எடுத்து * மாலை கொண்ட பெரு வாயா *
வெருவுரை கேட்டு வருவினை விலக * வரித்தோம் எங்கும் ஹரிநாமா *
திரு நரசிங்கத் திருமாலே * நின் திருவடி அடைந்தேன் அடியேனே!

SrI bhArgava (parasurAma) narasimmar

peruncina rAman tavamirukka * pallaruL seyda peru mAyA *
karunkuDalai kuDaindu eDuttu * mAlai koNDa peru vAyA *
veruvurai kETTu varuvinai vilaga * virittOm engum harinAmA *
tiru narasingat tirumAlE * nin tiruvaDi aDaindEn aDiyEnE !

8 ஸ்ரீ யோகாநந்த நரசிம்மர்

திருப்பணி செய்ய சிறுவனுக்கு * யோகம் சொன்ன பெரு மானே *
இருவினை கழற்றி இன்ப நதி * போகம் அளிப்பாய் பெரு வானே*
கருமணி வண்ணா கண்ணா * காதல் கொண்டேன் காவலனே *
திரு நரசிங்கத் திருமாலே * நின் திருவடி அடைந்தேன் அடியேனே!

SrI yOgAnanda narasimmar

tiruppaNi seyya ciRuvanukku * yOgam sonna peru mAnE *
iruvinai kazhaRRi inba nadi * bOgam aLippAi peru vAnE *
karumaNi vaNNA kaNNA * kAdal koNDEn kAvalanE *
tiru narasingat tirumAlE * nin tiruvaDi aDaindEn aDiyEnE !

9 ஸ்ரீ சத்ரவட நரசிம்மர்

திருவடி மடித்து அமர்ந்தாயே * தாமரை நிலையில் அருளாலே *
திருநூல் கொண்டு மகிழ்ந்தாயே * மரவரசன் கீழ் தெருளாலே *
திருவின் சொல்லில் உகந்தாயே * தவிக்கும் சேதனன் இருளாலே *
திரு நரசிங்கத் திருமாலே * நின் திருவடி அடைந்தேன் அடியேனே!

SrI catravaDa narasimmar

tiruvaDi maDittu amarndAyE * tAmarai nilaiyil aruLAlE *
tirunUl koNDu magizhndAyE * maravarasan kIzh teruLAlE *
tiruvin sollil ugandAyE * tavikkum cEtanan iruLAlE *
tiru narasingat tirumAlE * nin tiruvaDi aDaindEn aDiyEnE !

10 ஸ்ரீ பாவன நரசிம்மர்

இருப்பாய் செஞ்சுவின் மோகத்திலே * கொஞ்சிடும் பாவன கரையினிலே *
திருவைக் கொண்டாய் மடியினிலே * தேசுடன் அரவின் தலை கீழே *
விருந்தும் நீயே விதியும் நீயே * மருந்துமாவது மாதவன் தாளே *
திரு நரசிங்கத் திருமாலே * நின் திருவடி அடைந்தேன் அடியேனே!

SrI pAvana narasimmar

iruppAi cencuvin mOgattilE * konciDum pAvana karaiyilE *
tiruvaik koNDAi maDiyinilE * tEsuDan aravil talai klzhE *
tiru narasingat tirumAlE * tavikkum cEtanan iruLAlE *
tiru narasingat tirumAlE * nin tiruvaDi aDaindEn aDiyEnE !

11 மங்களம்

**அருமறை கருத்தை ஆழ்ந்தலசி * பொறுமையிலா வெறுமை பேசி *
தரும மறையோர் தனி உரையால் * கருமமவை துணை இலையால் *
செருவானும் வழியும் நீயே * சினம் நீக்க சரணே சாக்கே *
திரு நரசிங்கத் திருமாலே * நின் திருவடி அடைந்தேன் அடியேனே!**

mangaLam

arumaRai karuttai Azhndalasi * poRumaiyilA veRumai pEsi *
tarum maRaiyOr tani uraiyAl * karumam avai tuNai ilaiyAl *
ceru vAnum vazhiyum nIyE * cinam nIkka caraNE cAkkE *
tiru narasingat tirumAlE * nin tiruvaDi aDaindEn aDiyEnE !

(aDiyEn thank Smt. Kalyani Krishnamachari for the help in English transliteration)